யாழ்ப்பாணம் இல்லர் நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 02 ஞாயிற்றுக்கிழமை (17-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 274

# புலிகளுக்கு இந்திய உதவியை பெற்றுகொடுக்க மத்தியஸ்த முயற்சி?

## வன்னிக்கு ஈ. என். டி. எல். எவ்வினர் வந்து பேச்சு நடத்தினார்களாம்

புதுடில்லி, நவம்பர் 17

ஸ்ரீலங்கா அரசுப் படைகளுக்கு எதிரான போரில் விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கான மத்தியஸ்த முயற்சிகள் இடம்பெற்று வருகின்றனவாம்.

இந்திய ஆதரவுத் தமிழ்ப் போராளிக் குழுவான ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ. என். டி. எல். எவ்.) அமைப்பின் இரண்டு பிரதிநிதிகள் இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஓர் இரகசிய இடத்தில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் கடந்த மாத இறுதியில் நேரடியாகப் பேச்சு நடத்தித் திரும்பியிருக்கின்றார்கள்.

தமிழகப் பத்திரிகைகளை மேற்கோள்காட்டி புதுடில்லிச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றிரவு அறிவித்தது.

அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

புதுடில்லிச் செய்திகளின் படி ஈ. என். டி. எல். எவ். அமைப்பைச் சேர்ந்தோர் இரகசியப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள கடந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 215 பேருடன் புறப்பட்ட 2 வள்ளங்கள் இலங்கை கடற்படையிடம் சிக்கின!

### 12 இந்தியர்கள் பொலீஸ் விசாரணையில்

கொழும்பு, நவ. 17

மன்னார் பள்ளப்பாடு பகுதியில் இருந்து 215 தமிழ் அகதிகளுடன் இந்தியா நோக்கிச் சென்று கொண்டிருந்த இரு வள்ளங்கள் இலங்கைக் கடற்படையினரிடம் சிக்கின.

இந்த 215 பேரில் 122 பேர் சிறுவர் — சிறுமிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மூன்று வள்ளங்கள் தப்பி விட்டன என்று கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட இரு வள்ளங்களிலும் 12 இந்தியர்களும் இருந்தனர். இவர்கள் மன்னார் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டு பேசாலை முகாமுக்கு அனுப்பப்பட இருந்தனர்.

பொலீஸ் விசாரணையின் பின்னர் இந்த 12 இந்தியர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட இருப்பதாக மன்னார் பொலீஸ் தலைமைப் பொறுப்பதிகாரி வஜிரா எதிரிமான தெரிவித்தார்.

(இ-ரி)

## கிளிநொச்சிப் பகுதியில் விரைவில் சிவில் நிர்வாகம்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

''கிளிநொச்சியில் வெகுவிரைவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவிருக்கிறோம். அதற்கான சகல ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.''

இவ்வாறு இராணுவத் தளபதி ரொஹான் தளுவத்தை தெரிவித்தார்.

கிளிநொச்சிக்குத் திரும்பும் சகல சிவிலியன்களையும் நன்றாக விசாரணை செய்த பின்னரே கிளிநொச்சிக்குள் அனுமதிப்போம். யாழ். குடாநாட்டினுள் புலிகள் மக்களுடன் ஊடுருவல் செய்தது போன்ற சம்பவங்களைத் தடுக்கவே இந்த நடவடிக்கை என்றும் அவர் கூறினார். (இ-150)

## மூன்று படையினர் காயம்

கொழும்பு, நவ. 17

மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை விடுதலைப் புலி இயக்க உறுப்பினர் ஒருவர் கைக் குண்டை வீசியதால் 3 படையினர் காயமடைந்தார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-4)

## சித்தன்கேணிச் சந்தியில் துப்பாக்கி சூடு: ஒருவர் பலி

யாழ்ப்பாணம், நவ. 17

சித்தன்கேணி சந்திக்கு அருகாமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் அகப்பட்டு துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி ஒருவர் மரணமானார்.

இச்சம்பவத்தில் மானிப்பாயில் இருந்து சுழிபுரம் சென்று கொண்டிருந்த மானிப்பாய் வடக்கை சேர்ந்த சி. கணேசன் (வயது 58) என்பவரே மரணமானவராவார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணமானவர் இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தராவார். (இ-15-145)

## சாவகச்சேரி தாக்குதலில் படையினர் ஒருவர் பலி

### பொதுமக்களிலும் இருவர் காயம்

தென்மராட்சி, நவ 17

நேற்று முன்தினம் இரவு 7 00 மணி அளவில் சாவகச்சேரி பெரிய அரசடி பாதுகாப்பு அரண் மீது புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு படையினர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயம் அடைந்தார். பின்னர் பொது மக்களிலும் இருவர் காயம் அடைந்தனர்.

காயம் அடைந்த படைவீரர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

புலிகளின் தாக்குதலை அடுத்து படையினர் பதில் தாக்குதல் நடத்தினர்.

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க மடத்தடிக்கிளை காவலாளியும், உணவு உட்கொண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி சூட்டு காயத்துடன் இருவரின் சடலங்கள்

யாழ்ப்பாணம், நவ. 17

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரண்டு குடும்பஸ்தர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் மாலை, யாழ். ஆஸ்பத்திரியில் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டன.

தனங்கிளப்புப் பகுதியில் இருந்து எடுத்து வரப்பட்ட இச்சடலங்கள், கடந்த வியாழக்கிழமை இரவு தனங்கிளப்பு கடற்கரைப் பகுதியில் வைத்து இராணுவத்தால் சுடப்பட்ட பொதுமக்கள் இருவரினது என தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மறவன்புலோ கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் தர்மராசா (வயது 28), 5 பிள்ளைகளின் தகப்பனாரான சிவப்பிரகாசம் தனபோதன் (வயது 30) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

வன்னியில் உள்ள தமது

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளுக்கு நிவாரணம் வழங்கியதில் திருகோணமலையில் பலகோடி ரூபாமோசடி!

வடக்கு - கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்டு திருமலைக்கு அகதிகளாக இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் போர்வையில் பல கோடிக் கணக்கான ரூபா மோசடி இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது,

அகதிகள் பட்டியலில் போலிப் பெயர்களைப் பதிந்து அவர்களின் பெயரிகளில் சில அதிகாரிகள் பண மோசடி செய்திருப்பதை திருமலை அரச அதிபர் கண்டு பிடித்துள்ளார்.

திருகோணமலையில் அகதி முகாம்களிலும், நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் சுமார் 5 ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளனர்.

ஆனால் அகதி முகாம்களில் இல்லாதோர் பெயர்களும் நிவாரணப் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளதாகவும்—

1990 ஆம் ஆண்டு முதல் இந்த மோசடி இடம்பெற்று வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாதாந்தம் 28 லட்சம ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் மொரவேவா, திருமலை, கிளிவெட்டி உட்பட நான்கு பிரதேசங்களில் இந்த மோசடி இடம் பெற்றுள்ளதாகவும்—

மொரவேவா, திருமலை ஆகிய பிரதேசங்களில் இடம் பெற்ற மோசடிகள் குறித்து விசாரணைகள் முடிவடைந்துள்ளதாகவும்— செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோசடிச் சம்பவம் குறித்து கிராம சேவகர் ஒருவர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டென்மார்க் பத்திரிகையாளர் விடயம்: விவாதம் நடத்த கேட்கிறது ஐ.தே.க.

கொழும்பு, நவம். 17

டென்மார்க் நாட்டு பத்திரிகையாளர்கள் நால்வர் கடந்த புதன்கிழமை இலங்கையில் இருந்து நாடுகடத்தப்பட்டது குறித்தும் அதற்கான காரணங்கள் பற்றியும் முழுமையான விவாதம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நடத்த வேண்டும் என எதிர்கட்சியான ஐ. தே. கட்சி கேட்டுள்ளது.

இலங்கையின் எந்தச் சட்டங்களையும் அந்தப் பத்திரிகையாளர்கள் மீறாத போதிலும் அவர்கள் வெளியேற்றப்பட்டது இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவக்கைகளையே வெளிக்காட்டுகிறது என ஐ. தே. க. உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

(உ-10)

# மனித உரிமைகள் செயலணி கொழும்பில் அவசர மாநாடு

## யாழ். நிலைமை குறித்து ஆராயப்படும்

மனித உரிமைகள் செயலணிக் குழுவின் தலைவர் சி. ரி. ஜான்ஸ் நாளை திங்கட்கிழமை கொழும்பில் அவசர மாநாடு ஒன்றைக் கூட்டுகிறார்.

கடந்த வாரம் இவர் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் செயலணிக் குழுவின் கிளை அலுவலகத்தை திறப்பது குறித்தும்—

மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்தும் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இருந்ததும் – தெரிந்ததே.

இந்த மாநாட்டுக்கு இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு கொள்கை அமுலாக்கல் பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெனான்டோ பிள்ளை, தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. நீலன் திருச்செல்வம், ஐ. தே. க. எம். பி. மகிந்த சமரசிங்கா ஆகியோரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மனித உரிமைகள் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அதிகாரிகளும் மாநாட்டில் கலந்துகொளவார்கள்.

### தாக்குதல்

வன்னி மாவட்டத்தில் வியாழனன்று தனித்தனியாக இரு கிபிர் விமானங்கள் குண்டு வீசித்தாக்கின.

இந்த தாக்குதலின் போது வீரசிங்கம் செல்வம் என்ற 22 வயது இளைஞன் கொல்லப்பட்டார். 7 பேர் காயமடைந்தனர்.

(இ-3)

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை மயில்வாகனம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை மயில்வாகனம் 15 - 11 - 96 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், முத்தையாவின் (கனடா) சகோதரரும், கணேசமூர்த்தி (இ. போ. ச. கோண்டாவில்), பத்மராஜா (அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி), ஜெயந்தி (கனடா), றஞ்ராஜ் (லண்டன்), ரவிதாஸ் (லண்டன்), ஜெயதாஸ் (பல்கலைக்கழக மாணவன், மொறட்டுவ), ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலட்சுமி, சற்குணதேவி, கோகுலவதனி (லண்டன்), ஈசன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், கோகுலபாலன், கோகுலரமணன், கோகுலரூபன், அனித்தா, பிரதாப், சகாணி, சுஜான் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16 - 11 - 96 அன்று நடைபெற்றதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறேன்.

தகவல்:
ம. பத்மராஜா
(மகன்)

அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(8979)

## திருமதி மாணிக்கம் செல்லர்

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மாணிக்கம் நேற்று (16-11-96) காலமானார்.

இவர் செல்லரின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்), இராசம்மா, தங்கமுத்து, கிருஷ்ணபிள்ளை (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-11-96) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. திரிகரன் (நீர்வேலி)

சண்டில்குளம்,
கரவெட்டி.

(43684)

## முத்து நடராஜா

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், கற்பக்குளை கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற தபாலதிபர் முத்து நடராஜா 15-11-1996 இல் இயற்கை எய்தினார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும், திருமதி கிருஷ்ணவேணி சுந்தரமூர்த்தி, துஷ்யேந்திரராசா (பிரான்ஸ்), ஜெயேந்திரராசா (பிரான்ஸ்), சுசீந்திரராசா, (வெளிவாரி பட்டப்படிப்பு B.A இறுதி ஆண்டு மாணவன், பேராதனை), ஜெயந்தி (தொண்டர் ஆசிரியை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, கந்தரோடை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரமூர்த்தியின் (யாழ். அஞ்சல் அதிபர்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16-11-1996 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் கந்தரோடை சங்கம்புலவு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இல்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுசீந்திரராசா
மகன் (ராஜன்)

கற்பக்குளை,
கந்தரோடை,
சுன்னாகம்.

(43677)

## செல்லத்துரை சிவராசா

(ஓய்வுபெற்ற விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், அரியாலை வில்வந்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவராசா 13 - 11 - 96 இல் வவுனிக்குளத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பஞ்சவர்ணம் ஆகியோரின் அன்பு மகனும், அன்னபூரணியின் அன்புக் கணவரும், ரமேஷ் (நோர்வே), நளினி (பட்டதாரி B S A Cey), சுரேஸ் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரனின் (பட்டதாரி B. S. A. Cey) அன்பு மாமனாரும், வைஷ்ணவியின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற முத்தையா - இராசம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவனிக்குளத்தில் நடைபெற்றன.

தகவல்:
மு. குணரெட்ணம்
(மைத்துனர்)

49, வில்வந்தெரு,
அரியாலை.

[43683]

# ஹோம் பினான்ஸ் வைப்புப் பணம்

யாழ்ப்பாணம், நவ. 17

ஹோம் பினான்ஸ் நிதி நிறுவனத்தில் வைப்புச் செய்தவர்களின் பணத்தில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆகையால் யாழ்ப்பாணத்தில் உள்ள வைப்பீட்டாளர்கள் அதனைப் பெறுவதற்கு அந்த நிறுவனத்தின் பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளும்படி கோரவும். நிவாரணத் தொகை வழங்குவதில் யாழ். வைப்பீட்டாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

— இவ்வாறு ஹோம் பினான்ஸ் யாழ் கிளை வைப்பீட்டாளர்கள் சங்கத்தின் செயலாளருக்கு இலங்கை மத்திய வங்கியின், வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களைக் கண்காணிக்கும் பிரிவின் இயக்குநர் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட படிவத்தில் வைப்பீட்டாளரின் அடையாளம் மற்றும் விவரங்களைப் பிரகடனப்படுத்தி ஒரு வங்கி முகாமையாளர் அல்லது சட்டத்தரணி அதனை உறுதிப்படுத்திய பின்னர் நிதி நிறுவனப் பொது முகாமையாளருக்கு அனுப்பி வைத்தால் காசோலை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ)

# மக்கள் முகம்

ஏ. பி. ஐ. என அழைக்கப்படும் "அமெரிக்கன் பயோகிராஃபிக்கல் இன்ஸ்ரிரியூட்" (அமெரிக்க வாழ்க்கை வரலாற்றியல் நிறுவனம்) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரனை இந்த வருடத்துக்குரிய நாயகனாகத் (Man of the year) தெரிவு செய்துள்ளது.

பல நாடுகளில் இருந்தும் பல்வேறு துறை சார்ந்த நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், சமூகத் தொண்டர்களில் உலக சமூகத்துக்கு அரும் பெரும் பங்களிப்புச் செய்யும் ஒரு சிலருக்கு, ஏ. பி. ஐ. நிறுவனம் வருடாந்தம் "வருடத்தின் நாயகன்" விருது வழங்கிக் கௌரவிப்பதுண்டு.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மிகச் சிலரில் பேராசிரியர் செ. பாலச்சந்திரனும் ஒருவராவார்.

1967 ஆம் ஆண்டு தொடக்கம் ஏ. பி ஐ இந்த விருதை வழங்கி வருகிறது.

முன்னோடியான நோக்கங்களை அடைவதற்காகத் தம்மை அர்ப்பணித்து உழைத்தவர்களில் பலரின் ஆற்றல்களை ஆராய்ந்து மிக்க கடினமான தெரிவின் மூலம் உங்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது — என்று ஏ. பி. ஐ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் பேராசிரியர் செ. பாலச்சந்திரனுக்கு [illegible] கடிதத்தில் பாராட்டியுள்ளார்.

(அ)

# அன்பான அறிவித்தல்

கடந்த 8 - 10 - 96 முதல் யாழ். போதனா வைத்தியசாலையிலும் 7-11-96 முதல் வீட்டிலுமாக எழுந்து நடமாட முடியாத நிலையிலுள்ள நான் கொழும்பு சென்றுவிட்டதாக கூறப்படும் வதந்திகளுக்காக வேதனைப்படுகின்றேன். ஆண்டவன் கிருபையால் குணமடைந்து எனது செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிப்பேன் என்று எமது கல்விச் சேவைகளை மதித்து தபால் மூலமு பல வழிகளிலும் தொடர்பு கொள்ளும் பெற்றோர்களுக்கும் மாணவ மணிகளுக்கும் உருக்கமாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி.

க. ஆனந்தகுமார்
இயக்குநர்,
(BOND)

Bond Institutes.
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
16-11-96

(43686)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 04 — 01 — 1937



உதிர்வு: 20 — 10 — 1996

திருமதி

## பூரணரத்தினம் உருத்திராபதி

(வல்வெட்டித்துறை)

எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரத்தில் ஆழ்த்தி 20-10-1996 அன்று அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவி பூரணரத்தினம் (தங்கக்கிளி) அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் 19-11-1996 செவ்வாய்க்கிழமை நடைபெறும். அத்தருணம் அவருடைய ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தித்தும், மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவு கேட்டு இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம்.

**கணவன்:** கந்தசாமி உருத்திராபதி (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்)

**பிள்ளைகள்:** குகலட்சுமி (N. Z.), ரூபலட்சுமி (வல்வை), சேகர் (Lond), காலஞ்சென்ற சுதாகர், காலஞ்சென்ற சிறீதர், காலஞ்சென்ற உதயலட்சுமி, யசோதர் (Lond), கஜலட்சுமி (Lond).

**மருமக்கள்:** றஞ்சித் கனகநாயகம் (N Z), பாலேந்திரன் (Greese), ஜெயதரன் (Lond), குமுதா (Lond), அனித்த (Lond),

**பேரப்பிள்ளைகள்:** மீரா (N. Z.), மயூரன் (N.Z), சுதாகரன் (வல்வை), துவாரகா (வல்வை), சிறீதர்சன் (Lond), சுந்தரி (Lond).

"சில்லாலை",
வல்வெட்டித்துறை.

(43663)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்

# ஸயருக்குப் படை அனுப்ப அங்கீகாரம்

## ஐ. நா. பாதுகாப்புச் சபை வழங்கியது

கிழக்கு ஸயரில் பன்னாட்டுப் படைகளை நிறுத்தும் தீர்மானத்துக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

15 அங்கத்தவர்களைக் கொண்ட பாதுகாப்புச்சபை நேற்று முன்தினம் இரகசிய ஆலோசனை நடத்தி மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை ஸயர் நாட்டில் கனடா நாட்டின் தலைமையில் இந்தப் படைகளை அனுப்ப அங்கீகாரம் வழங்கியது.

சுமார் 10 இலட்சம் அகதிகளுக்கு உணவு உட்பட பல்வேறு நிவாரணங்களைவழங்க இந்த படை உதவியாக இருக்கும்.

பன்னாட்டுப் படையில் 10 ஆயிரம் பேர் அங்கம் வகிப்பார்கள். (இ:3)

பாகிஸ்தானில்

## குண்டு வெடிப்புக்களுடன் தொடர்புள்ள இருவர் கைது

இஸ்லாமாபாத், நவ. 17

பாகிஸ்தானில் குண்டு வெடிப்புக்களுடன் தொடர்புடைய இருவர் கைதாகி உள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி லாகூர் விமான நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் 4 பேர் பலியாகினர்.

பொலீசார் மேற்கொண்ட விசாரணைகளின் படி இக் குண்டு வெடிப்புக்குப் பொறுப்பானவர்கள் என கருதப்படும் இருவர் பாகிஸ்தானில் இடம் பெற்ற பல குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுகளை வெடிக்கவைப்பதற்கான பயிற்சிகளைத் தாங்கள் இந்தியாவில் பெற்றதாக இந்த இருவரும் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் கப்டன் இம்ரான் கானால் நிறுவப்பட்டுள்ள புற்று நோய் மருத்துவமனையில் கடந்த ஏப்பிரல் 14 ஆம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கும் தாங்களே பொறுப்பு என இந்த இருவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். (இ-10)

# கௌதமாலா போர் முடிவடைகின்றது

### உலக அரங்கில்

மத்திய அமெரிக்க நாடான கௌதமாலா நகரில், ஏறத்தாழ 36 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் அமைதி ஒப்பந்தம் ஒன்று எதிர்வரும் டிசம்பர் 29 ஆம் திகதி கையெழுத்திடப்படும் என்று அந் நாட்டு அரச தலைவர் கடந்த திங்களன்று அறிவித்தார்.

சிலியில் இடம்பெறும் 20 நாடுகளின் தலைவர்கள் நடத்தும் கூட்டத்தில் கௌதமாலா அரசுக்கும், வலதுசாரி புரட்சியாளர்களுக்குமிடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்றும் அவர் கூறினார்.

மத்திய அமெரிக்காவிலே நீண்ட காலமாக இடம் பெறும் கௌதமாலா உள்நாட்டுப் போரில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். (இ-ரி)

# இலட்சக்கணக்கான தெருச்சிறார்கள் இந்திய காவல் துறையால் இம்சை

## மனித உரிமைக்குழு கண்டனம்

புதுடில்லி, நவ. 17

இந்தியாவில் இலட்சக்கணக்கான தெருச்சிறார்கள் காவல் துறையினரால் கொடுமைப் படுத்தப்பட்டும், கொல்லப்பட்டும் வருகிறார்கள் என்று மனித உரிமைகள் குழு ஒன்று தெரிவித்தது.

தெருச்சிறார்களைக் கொடுமைப்படுத்தும் காவல்துறையினருக்கு எதிராகச் செயற்பட காவல்துறை மேலதிகாரிகள் தயங்குகிறார்கள் என்றும் —

இந்தியாவில் ஏறத்தாழ 1 கோடியே 8 லட்சம் தெருச்சிறார்கள் உள்ளனரென்றும் ஆசியாவுக்கான மனித உரிமைகள் கண்காணிப்பாளர் சிட்னி ஜோன்ஸ் தெரிவித்தார்.

திருடுதல், பிச்சை எடுத்தல், தெருவோரம் சிறு சிறு தொழில்கள் செய்தல், விபசாரத்தில் ஈடுபடுதல் போன்றவற்றில் சம்பந்தப்படும் சிறார்கள் காவல்துறையினரால் அடித்து நொருக்கப்படுகின்றார்களென்றும் இவர்களில் சிலர் கால்கள் முறிந்தும், கேட்கும் தன்மை இழந்தும் உள்ளனரென்றும் புதுடில்லியின் சமூகசேவகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ-ரி)

# இனப்பிரச்சினையில் ஜே.ஆர். அணுகுமுறை

# அவர் ஆட்சியில் கறை படிந்த அத்தியாயம்!

## வடக்கில் ஆட்கடத்தல், கொலைகள் ஆரம்பமும் அவர் காலத்திலேயே

*கொழும்பிலிருந்து வெளிவரும் "தினமுரசு" வார சஞ்சிகையில் "ஜே. ஆர். ஜெயவர்த்தனா கண்டி யாத்திரைமுதல் இறுதி யாத்திரைவரை" என்ற தலைப்பில் "இராஜதந்திரி" எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.*

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர்- மின்சாரம், தொலைபேசி ஆகியன யாழ்ப்பாணத்தில் சீராக இருந்த காலம். நேரந்தவறாது யாழ்தேவி ரயில்கூட குடாநாட்டின் ஊடாக கூவிச் சென்ற காலகட்டம்.

அப்போது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கமே பதவியிலிருந்தது.

யாழ்நகரில் டச்சுக் கோட்டையைச் சூழ உள்ளது முற்றவெளி மைதானம். அன்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவராகவும், எதிர்க் கட்சித் தலைவராகவுமிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஐ. தே. க. வின் சிரேஷ்ட பிரமுகர்களின் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்து அங்கு பொதுக்கூட்டமொன்றை நடத்தியிருந்தது.

காலஞ்சென்ற காமினி திசாநாயக்கா, முன்னாள் அமைச்சர்களான ஏ.ஸி.எஸ். ஹமீத், கே. டபிள்யு. தேவநாயகம் உட்பட ஐ.தே.க. பிரமுகர்கள் பலரும் அன்று யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற அப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினர்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசுவதற்கு எழுந்தார். அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த ஐ. தே. க ஆதரவாளர்கள் பலரும் அவருக்கு மாலைகள் சூடி ஆரவாரஞ்செய்தனர்.

முற்றவெளியில் அன்று ஜே.ஆரின் பேச்சைக் கேட்பதற்காகப் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

மேடையிலிருந்தவர்கள், மற்றும் மக்கள் கூட்டத்தினருக்கும் கைகூப்பியபடி ஜே. ஆர். தமது பேச்சை ஆரம்பித்தார்.

எப்போதும் தமது பேச்சின் போது பழைய சம்பவங்களையும் அசைபோட்டுப் பேசுவதே ஜே.ஆரின் பாணியாகும். அன்று யாழ்ப்பாண முற்றவெளிக் கூட்டத்திலும் பழைய சம்பவங்கள் சிலவற்றை அவர் நினைவுபடுத்தத் தொடங்கினார்.

அச்சமயத்தில் மேடைக் கருகே கூட்டத்திலிருந்து ஒரு குரல் "கண்டி யாத்திரையை ஏன் நடத்தினீர்கள்?" என்று ஒலித்தது.

அப்போது ஜே. ஆர். ஜெயவர்த்தனா. "நான் அதற்கு பதில் கூறுகின்றேன்; என்னைப் பேச அனுமதியுங்கள்" என்று கூறினார்.

அப்போது, "இல்லை இல்லை கண்டி யாத்திரை பற்றிக் கூறிவிட்டு ஏனையவற்றைப் பேசுங்கள்" என்று கூட்டத்திலிருந்து வேறு பல குரல்கள் வெளிவந்தன.

மேடையிலிருந்த ஐ. தே. க பிரமுகர்கள் எழுந்து நின்று கூட்டத்தவரை ஆசுவாசப் படுத்த முயன்றனர்.

அவ்வேளையில் 'ஜே. ஆர். நின்றிருந்த மேடையை நோக்கி கற்கள் வீசப்பட்டன. இரவு சுமார் எட்டுமணி இருக்கும்.

ஜே. ஆரின் மேடைக்குப் பின்னால் போடப்பட்டிருந்த அலங்காரச்சிகரம் ஆட்டங் காணத் தொடங்கியது.

"உன்னுடைய பேச்சும் வேண்டாம்; நீயும் வேண்டாம்," என்று கூறியபடி கூட்டத்திலிருந்து சரமாரியாக கற்களும், செருப்புக்களும் ஜே. ஆரின் மேடையை நோக்கி வீசப்படலாயின.

மேடைக்குப் பின்னாலிருந்த அலங்காரச் சிகரம் பிடுங்கி எறியப்பட்டதுடன் ஐ.தே க. வினரின் கூட்டமும் முடிவுக்கு வந்தது.

கூட்டத்தில் கலந்து கொண்டமக்கள் எதுவுமறியாதவர்களாக, அடிதடி எதுவும் பலமடைந்துவிடுமோ என்று பயந்தவர்களாக முற்றவெளி மைதானத்திலிருந்து நாலாபுறமும் சிதறி ஓடலாயினார்கள்.

மறுநாள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த தினசரியான 'ஈழநாடு' ஜே ஆர் ஜெவர்த்தனாவின் முற்றவெளிக்கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. கல்வீச்சுடன் மேடை அலங்காரங்கள் பிடுங்கி எறியப்பட்டபோதிலும் ஜே ஆர் ஜெயவர்த்தனா காயமெதுவுமின்றி மேடையிலிருந்த அவரது ஆதரவாளர்களால் பாதுகாப்பாக முற்றவெளி மைதானத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டார் என்ற செய்தியை வெளியிட்டிருந்தது.

### கண்டி யாத்திரை

1957 ஆம் ஆண்டு ஜே ஆர் ஜெயவர்த்தனா கண்டி யாத்திரையை மேற்கொண்டு, அன்றைய பிரதமர் எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும், தமிழரசுக் கட்சித்தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேறாது தடுத்தார்.

தாம் ஒரு ஜனநாயகவாதி, அஹிம்சாவாதி என்று காட்டும் வகையில் 'யாத்திரை' என்ற பெயரில் அன்று ஜே. ஆர். அந்த ஒப்பந்தத்திற்கெதிராகப் போர்க் கொடி உயர்த்தியிருக்கலாம் ஆனால் இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்படக்கூடிய எந்தவொரு தீர்வும் குழப்பப்படுவதற்கு அந்த விஷமத்தனமான கண்டியாத்திரையே கால்கோளிட்டிருந்தது

அந்த யாத்திரை மூலமாகவே, தாம் ஒரு பேரினவாதி என்பதையும் ஜே. ஆர். முதலில் இனங்காட்டியிருந்தார்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் இனப்பிரச்சினை இன்று இருந்திருக்காது என்பது அர்த்தமல்ல. பேரினவாதிகள் தமது அரசியல் செல்வாக்கைக் கட்டி எழுப்புவதற்கு இனப்பிரச்சினையையே தொனிப்பொருளாகக் கொண்டு வந்துள்ளனர்,

1957 ஆம் ஆண்டு கண்டி யாத்திரையை நடத்தி பண்டா — செல்வா. ஒப்பந்தத்தை ஜே.ஆர். தடுத்தார். ஆனால் ஓராண்டின் பின்னர் - 1958 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயே இனக்கலவரம் தமிழர்களுக்கெதிராக பூதாகரமாக வெடித்திருந்தது.

எனவே தேசியக் கட்சிகளான ஐ தே. கவும், ஸ்ரீல சு. க. யும் கடந்தகாலம் முதற்கொண்டு நிகழ்காலம் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உளசுத்தியுடன் உடன்படவில்லை என்பதே தெளிவு.

1977 ஆம் ஆண்டு பெரும் பலத்துடன் ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார்.

1978ஆம் ஆண்டு தாம் பெற்ற பெருவெற்றியையடுத்து காலிமுகத்திடலில் இலங்கையின் 30 ஆவது சுதந்திர தினத்திலன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியாகவும் ஜே ஆர். பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

1970 ஆம் ஆண்டு இலங்கை ஒரு குடியரசாக மாறிய போது, தேசாதிபதிப் பதவி ஜனாதிபதி பதவியாக மாறியிருந்தது. இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாக தேசாதிபதியாகவிருந்த வில்லியம் கோபல்லாவே பதவி வகித்தார். ஆனால் 1978ஆம் ஆண்டிலேயே ஜே.ஆர். ஜெயவர்த்தனா முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

வடக்கிலும், கிழக்கிலும் இன்று மனித உரிமை மீறல் சம்பவங்கள் பலவும் இடம் பெற்றிருக்கக் காணப்படுகின்றன. பாலியல் பலாத்காரம், கொலை, ஆட்கடத்தல், என்றெல்லாம் அடிப்படை மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் கோரத்தாண்டவமாடுகின்றன.

### ஆட்கடத்தல் கொலைகளின் ஆரம்ப காலம்

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின், ஆட்சிக் காலத்தின் ஆரம்பகாலப் பகுதியிலேயே வடக்கே ஆட்கடத்தல், கொலை என்பன தலைகாட்ட ஆரம்பித்தன.

யாழ்ப்பாணத்தில் 1978 ஆம் 79 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இளைஞர்கள் சிலர் காணாமல் போயிருந்தனர். அவர்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சிலரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டென்மார்க் செய்தியாளர் விடயத்தில் இலங்கை தவறு?

கொழும்பு. நவ. 17.

டென்மார்க்கில் இருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பப் பட்ட சித்ரா ராஜேந்திரன் என்ற தமிழ்ப் பெண்ணின் நிலை குறித்து செய்தி சேகரிக்க இலங்கைக்கு வந்த 4 டென்மார்க் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு டென்மார்க் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட விடயத்தில் இலங்கை அரசு அத்து மீறிய வகையில் நடந்து கொண்டதா?

அந்தப் பிரச்சினையை முறையாகக் கையாளாமல் இலங்கை குழப்பி விட்டது என்றும்—

அது குறித்து நடைமுறை எதிலும் தகவல் துறை அமைச்சை கலந்து ஆலோசிக்க வில்லை எனவும்—இலங்கை தகவல் துறை அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்க தெரிவித்தார். (இ-3)

# இனப்பிரச்சினையில்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தன.

கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர்களில், இன்பம் என்ற தீவிரவாத இளைரும் ஒருவராவார்.

### ஜே. ஆர். அனுப்பிய பிரிகேடியர் வீரதுங்கா

ஜே. ஆரின் புலனாய்வு நடவடிக்கைகளைக் கவனிக்கவென அவரது நம்பிக்கைக்குரிய இராணுவ அதிகாரியான பிரிகேடியர் வீரதுங்க அன்று பூரண அதிகாரங்களுடன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவத்தின் கனரக இராணுவ வண்டிகள் யாழ்ப்பாண மண்ணில் உருள ஆரம்பித்ததும் ஜே. ஆரின் ஆட்சிக்காலத்திலே ஆகும்.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டமை மற்றும் அங்கு விரிவான முறையில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை 1983 ஆம் ஆண்டு இனக்கலகம் என்பவையெல்லாம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அராஜக ஆட்சியில் இடம்பெற்றவை என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

சுமார் 11 வருடகாலம் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தார்.

தாராளப் பொருளாதாரக் கொள்கை என்பது அவரது தாரக மந்திரமாக இருந்தது. ஆனால் அத்தாரக மந்திரத்தை அவரால் ஒழுங்காக உச்சாடனம் செய்வதற்கு இலங்கையின் இனவாத அரசியல் இடமளித்திருக்கவில்லை.

1987 ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கும். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையே ஏற்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் கூட வெறுமனே ஒரு கண் துடைப்பாகவே விளங்கியிருந்தது.

ஜே. ஆரைப் பற்றிய கதை வரும்போதெல்லாம். அவரைச் சார்ந்தவர்கள் இரண்டாம் உலகப் போரின் பின்னர் சான் பிரான்ஸிஸ்கோ நகரில் அவர் நிகழ்த்திய உரை பற்றியே குறிப்பிடுவதுண்டு.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஒரங்கட்டப்பட்டிருந்த ஜப்பானை மீண்டும் உலக சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜே. ஆர். தமது சான்பிரான்ஸிஸ்கோ நகர உரையில் கூறிருந்தார்.

''பகைமையை அன்பினாலேயே வெல்ல வேண்டும்,'' என்று ஜே.ஆர். சான்பிரான்ஸிஸ்கோ உரையில் கூறியிருந்தார். புத்தபகவானின் போதனைகளையும் அவர் அப்போது குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் 80 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் வடக்கே தீவிரவாத நடவடிக்கைகள் சூடுபிடித்த வேளை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேண்டுமானால் ''சாத்தானுடனும் நட்புக் கொள்வேன்'' என்று ஜே.ஆர். கூறியிருந்தார்.

இக்கூற்றையடுத்தே யாழ்ப்பாண நகரின் மையத்திலிருந்த வைத்தியசாலையை இடம் மாற்றுவதற்கான உத்தரவை அன்று அரசு வழங்கியதுடன், யாழ்ப்பாணக்கோட்டையைச் சூழவரவுள்ள பிரதேசமும் ஒரு மரணவலயமாக உருமாறியது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை அறிமுகப்படுத்தித் தம்மை ஒரு வரலாற்று நாயகனாக உருவாக்குவதற்கு முயற்சித்தார். ஆனால் அந்த முயற்சியில் அவர் கையாண்ட அணுகுமுறைகள் - குறிப்பாக இனப்பிரச்சினைத் தீர்வில் அவர் கொண்டிருந்த நிலைப்பாடு என்பன அவரது ஆட்சிக் காலத்தில் ஒரு கறை படிந்த அத்தியாயத்தையேஏற்படுத்தியிருந்தது.

கண்டி யாத்திரை மூலம் தம்மை ஒரு முக்கிய அரசியல் வாதியாக இனங்காட்டித் தொடர்ந்து தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களிலெல்லாம் தம்மை ஒரு பெரும் அரசியல் சக்தியாகக் கட்டி எழுப்வதில் ஜே. ஆர். முனைப்பாக இருந்தார்.

தமது எண்ணங்களை எதிர்பார்ப்புகளை ஜே. ஆர். நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் நாட்டு மக்களிடையே பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியில் கூட அவரது நடவடிக்கைகள் பிரபலம் பெறவில்லை என்பதனையே ஜே. ஆரின் இறுதி யாத்திரையும் அந்த யாத்திரை குறித்து சந்திரிகா ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நிலைப்பாடும் புலப்படுத்தியிருந்தன. ★

தமிழ் - ஆங்கில தட்டச்சு மற்றும்
றோணியோ வேலைகளுக்கு
அருண்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உதவியாளர் தேவை
றபர்சீல் செய்யும் ஸ்தாபனத்துக்கு பெண் உதவியாளர் தேவை. விண்ணப்பிக்கவும்.
விலாசம்:
மேர்வின்ஸ்,
91/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(43676)

# ஆன்மீகம், பத்திரிகை, அரசியல் துறைகளில் அருந் தொண்டாற்றிய நம. சிவப்பிரகாசம்

தூய வெண்ணீறு பொலிந்த திருமேனியும் எனெழுந்து இயங்கிய யாக்கையும் சிவநாமம் ஒலிக்கும் திருவாயும் நரைத்த வெண்தாடியும் தவக்கோலமும் ஒன்றிணைந்த ஓர் உருவம் கடந்த பல ஆண்டுகளாக மல்லாகம் தெல்லிப்பழை வீதியில் உலாவிக் கொண்டிருந்தது. கொழும்புத்துறை மகாமுனிவரின் பூரண ஆசீர்வாதம் பெற்ற இவ்வுருவந்தான் எங்கள் சிவப்பிரகாசம் ஐயாவின் திருவுருவம். எண்பத்தி ஒன்பது ஆண்டுகள் எம் மத்தியில் நிறைவாக வாழ்ந்து செய்யத்தக்க நல்ல கருமங்கள் அத்தனையையும் செய்து நல்ல உள்ளங்களில் எல்லாம் என்றும் வீற்றிருக்கக் கூடிய தகைமை பெற்றவர்.

செந்தமிழிலும், ஆங்கிலத்திலும் அவ்வத் துறை தோய்ந்த புலமையைப் பெற்றவர் இவர். சைவப்பெரியார் சிவபாதசுந்தரம், வித்துவான் கணேசையர், சேர். அருணாசலம் மகாதேவா, நவநீத கிருஷ்ணபாரதியார் ஆகியோரிடத்தில் உயர் கல்வி பெற்றவர். தான்கற்ற கல்வியின் பயனாக கல்வி அமைச்சில் எழுதுவினைஞராகக் கடமை ஏற்று முப்பத்தெட்டாவது வயதுவரை அரசின் கீழ் கடமையாற்றியவர். அதன் பின்பு சட்டக்கல்லூரி மாணவனாகச் சேர்ந்து நாலு ஆண்டுகள் தனது கல்வியை முடித்து சிறந்த சட்டத்தரணியாக வெளியேறியவர்.

அக்காலத்தில் சைவபரிபாலன சபையின் தலைவராக பல ஆண்டுகள் பணிபுரிந்த அப்புக்காத்து முத்துசுவாமி அவர்கள், இந்துசாதனப் பத்திரிகையின் ஆசிரியராக இவரைநியமித்ததுகுறிப்பிடத்தக்கது. ஆங்கிலப் புலமை மிக்கவராகையால் இந்து சாதன ஆங்கில இதழுக்கும் இவரே ஆசிரியராக விளங்கினார். 20-09-1948 ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து நாற்பத்தி ஐந்து ஆண்டுகள் இந்துசாதனப் பத்திராதிபராக விளங்கியமையும் எழுத்தாற்றலினால் இத்துறையில் பெரும்புகழ் பெற்றமையும் அறிஞர்களினால் அவ்வக்காலங்களில் பாராட்டப்பெற்றமையும் கண்கூடு.

வெண்பா பாடுவதில் புலமை மிக்கவராகையால்

### நீத்தார் நயப்புரை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ''இறை ஒளி வெண்பாப்புலவர்'' என்னும் பட்டத்தை வழங்கிப் பாராட்டினார்.

### பத்திரிகைப் பணி

சிவப்பிரகாசம் ஐயா அவர்களது வித்துவத் தன்மையினையும் பத்திரிகைப் பணியையும் மதித்த அமெரிக்கன் கல்விக் கவுன்சில் என்ற நிறுவனம் மூன்று மாதகாலம் புலமைப் பரிசில் ஒன்றை வழங்கி அங்கு பத்திரிகைப் பயிற்சி பெறவும் வாய்ப்பளித்தது. அத்துடன் உலகஞ் சுற்றி வரவும் ஆங்காங்கு மன்றங்களில் உரையாற்றவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

அமெரிக்காவிலிருந்து திரும்பியவுடன் ஐயா அவர்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயப் பரிபாலன சபையில் இணைந்து கொண்டார். கால்நூற்றாண்டு காலம் இச் சபையின் உபதலைவராக இருந்து ஆலயவளர்ச்சிக்கு அரும்பாடுபட்டமையை என்றும் எங்கள் நெஞ்சத்திருத்தி நினைவு கொள்வோம்.

ஆத்மீகத்துறையில் எவ்வளவு ஈடுபாடு கொண்டு வாழ்ந்தாரோ, அவ்வளவுக்கு அரசியல்துறையிலும் ஈடுபாடு கொண்டு விளங்கினார். மாணவர் காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தை ஆரம்பித்து தமிழ் அரச மொழியாக இருக்க வேண்டும் என்று குரல் எழுப்பினார். அரசியல் கூட்டங்கள் பலவற்றிலும் கலந்து தாம் எடுத்த கட்சிக்காக வாதாடும் வல்லமை இவருக்கிருந்தது.

சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், மொழிபெயர்ப்பு, சொல்லாற்றல், கவிதை புனைதல் ஆகியவற்றில் இப் பெரியார் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கியமை கண்கூடு

இவரின் பூத உடல் மறைந்து ஓர் ஆண்டு காலம் கடந்து விட்டதென்றாலும் இந்தப் புண்ணிய ஆத்மாவின் அர்த்தமுள்ள பணிகள் அத்தனையும் எம்முள்ளத்தை விட்டு அகலமாட்டா என்பது உண்மை.

அன்னாரின் பொன்னார் திருவடிகளுக்கு எமது அஞ்சலி உரித்தாகுக.

—சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை - நீர்வேலி

## 1997 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள பின்வரும் இறைச்சிக்கடைகள் சந்தைகளை 1997 - 01 - 01 முதல் 1997 - 12 - 31 வரை குத்தகைக்கு ஏற்று நடத்துவதற்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் 02 - 12 - 1996 ஆம் திகதி மாலை 2-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை உரியபடி படிவக்கட்டணம், கேள்விவைப்புப்பணம் என்பவற்றை உரிய உப - அலுவலகங்களில் செலுத்தி 29 - 11 - 1996 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 04 - 12 - 1996 ஆம் திகதி காலை 10 மணிக்கு கோப்பாய் - உப அலுவலகத்தில் இயங்கும் தலைமைக் காரியாலத்தில் திறக்கப்படும்.

சித்திரைக் கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையின் 1 / 3 பங்கை உடன் செலுத்தி மாதாந்தம் 10 சம தவணைப்பணங்களாக மீதித்தொகையைச் செலுத்துதல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

போதிய காரணங்களுக்காக கேள்விகளை நிராகரிக்கவோ, இரத்துச் செய்யவோ விசேட ஆணையாளர்களுக்குப் பூரண அதிகாரம் உண்டு.

| இல. | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விப் பிணைப் பணம் | ஆககுறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | இறைச்சிக்கடைகள் | | | |
| | 1. உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 250-00 | 40,000/- |
| | 2. ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 25,000/- |
| | 3. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 25,000/- |
| | 4. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 150-00 | 500-00 | 1,50,000/- |
| | 5. புத்தூர்ச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 250-00 | 75,000/- |
| | 6. இருபாலைச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100-00 | 250-00 | 60,000/- |
| | 7. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 100-00 | 150-00 | 30,000/- |
| 2. | 1. உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 50-00 | 150-00 | 15,000/- |
| | 2. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 20,000/- |
| | 3. புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 50-00 | 100-00 | 2,000/- |
| | 4. இருபாலைச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 50-00 | 100-00 | 2,000/- |
| | 5. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100-00 | 150-00 | 30,000/- |
| 3. | சந்தைகள் | | | |
| | 1. உரும்பிராய் மத்திய சத்தை | 100-00 | 250-00 | 45,000/- |
| | 2. அச்சுவேலி பொதுச்சந்தை | 150-00 | 500-00 | 160,000/- |
| | 3. ஆவரங்கால் மரக்கறிச்சந்தை | 50-00 | 100-00 | 1,000/- |
| | 4. கோப்பாய் வடக்கு சந்தை | 50-00 | 100-00 | 1,500/- |
| 4. | மீன்சந்தை | | | |
| | 1. நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 50-00 | 100-00 | 5,000/- |
| | 2. இருபாலை மீன் சந்தை | 50-00 | 100-00 | 2,000/- |
| 5. | 1. நீர்வேலி உப-அலுவலக வளவு | 10-00 | 25-00 | 250/- |

கதிரவேலு கேதீஸ்வரன்,
விசேட ஆணையாளர்.

வலி கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.
15 - 11 - 1996

(சி-3509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கடற்படையின் போர்த் திட்டம் பெரும் தோல்வி?

அண்மையில் திருகோணமலைத்துறை முகத்துக்கு வெளியே கடற் புலிகள் தற்கொலைத் தாக்குதல் படகினால் கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகான — டோறா ரக — 'பி - 457' மூழ்கடிக்கப்பட்டதும் —

இரண்டு பேருடன் வந்த அந்தத் தற்கொலைத் தாக்குதல் படகைத் தவிர, எதிரிகளின் வேறு எந்தப் படகும் இச்சம்பவத்தில் மூழ்கடிக்கப் படாததும் —

கடற் புலிகளுக்கு எதிரான கடற்படையின் போர் முறைத் திட்டம் இன்னும் தவறாகவே இருக்கின்றது என்பதை நிரூபிப்பதற்கு — செயல் வடிவில் நிகழ்ந்த — நல்ல ஆதாரங்களாகும்.

## பாடத்தை கடற்படை இன்னும் படிக்கவில்லை

1989 இல் கடற் புலிகள் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்து விட்ட பின்னரும், எதிரி இது வரை என்ன பாடத்தைப் படிப்பித்திருக்கிறான் என்பதை ஸ்ரீ லங்கா கடற்படை இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

பாரிய, சிறந்த ஆயுதங்களைக் கொண்ட — ஆனால் வேகமும் யுத்த தந்திரங்களும் குறைந்த — பெரும் தாக்குதல் கப்பல்களின் தற்காப்பு ஏற்பாடுகளை —

அதிக எண்ணிக்கையில் இலகுவாகத் தயாரிக்கக் கூடிய சிறிய படகுகளைத் திரளாகக் கொண்டு சென்று தாக்குவதன் மூலம் தோற்கடிக்கலாம் என்பதை பல தடவைகள் திரும்பத் திரும்ப புலிகள் நிரூபித்திருக்கின்றார்கள்.

மூன்றாவது ஈழப்போரில் விமானப் படையும் இராணுவமும் ஏவுகணைகள், பாரிய விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், பாரிய மோட்டார்கள் போன்ற புதிய புதிய ஆயுதங்களின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

ஆனால் கடற்படைக்கு அந்நிலை ஏற்படவில்லை. இரண்டாம் ஈழப்போரில் செய்தவற்றையே கடற்புலிகள் இன்றும் — மூன்றாவது ஈழப்போரிலும் — செய்து கொண்டிருக்கின்றார்கள்.

## கடற் புலிகள் இதுவரை அழித்தவை

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் சில கடற்படைக் கப்பல்களே மூழ்கடிக்கப்பட்டன. ஆனால் கடந்த நான்கு வருடங்களில் கடற்படையின் இழப்பை ஆய்வு செய்து பார்த்தால் கடற்புலிகளால் அழிக்கப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட 24 கடற்படைப் படகுகளில் 19 கலங்கள் சண்டைக் கப்பல்கள் என்பது புலனாகும்.

மற்றைய ஐந்தில் ஒன்று கண்காணிப்புக் கட்டளைக் கப்பல். மூன்று விநியோகக் கப்பல்கள். ஒன்று 'டக்' (இழுவைப் படகு) ஆகும்.

> 'ஸ்ரீலங்காவின் கடற் தந்திரோபாயம் தவறானது?' என்றதலைப்பில் 'த சண்டே ஐலண்ட்' ஆங்கில வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் வரைந்த கட்டுரையின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகுகின்றது.

இது தவிர வர்த்தகக் கப்பல் ஒன்றும் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

கடற்புலிகளால் அழிக்கப்பட்ட 19 சண்டைக் கலங்களில் பத்து, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட — கரையோர ரோந்து — படகுகளாகும். இவற்றில் ஐந்து 1993 நவம்பரில் நாகதேவன் துறையில் வைத்து எதிரிகளால் கைப்பற்றப்பட்டன; இரண்டு யாழ். குடாக் கடலில் 1993 ஓகஸ்டில் மூழ்கடிக்கப்பட்டன. இரண்டு கடந்த ஜூனில் காரைநகர் கடலில் மூழ்கடிக்கப்பட்டன. மற்றைய ஒன்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் கடற்புலித் தளத்தின் மீதான நடவடிக்கையில் இழக்கப்பட்டது.

எஞ்சிய ஒன்பது சண்டைக் கலங்களில் ஐந்து 'டோறா' வகையைச்சேர்ந்த அதிவேகத் தாக்குதல் படகுகளாகும்; மூன்று பாரிய பீரங்கிக் கப்பல்களாகும். எஞ்சிய ஒன்று அப்போது கடற்படையின் பாரிய யுத்தக் கப்பலாக இருந்த 'சாகரவர்த்தனா' ஆகும்.

கடற்புலிகளால் அழிக்கப்பட்ட 'டோறா' ரக அதிவேகத் தாக்குதல் படகுகளின் விவரம் வருமாறு:-

★ பி- 457, பி- 458:- இரண்டும் கடந்த ஜனவரியில் முல்லைத்தீவு அருகே.

★ பி- 483, பி- 456 இரண்டும் ஒன்றாக 1995 ஓகஸ்டில் முல்லைத்தீவில்.

★ பி 484 — 1993 ஓகஸ்டில் யாழ். குடா நாட்டுப் பகுதியில்.

அழிக்கப்பட்ட பீரங்கிக் கப்பல்களில் ''சூரியா'', ''ரணசுறு'' இரண்டும் 1995 ஏப்ரலில் திருகோணமலையில்;


**பகுதி - 1**

''ரண விரு'' கடந்த ஜூலையில் முல்லைத்தீவில்.

## புலிகள் முன்னரே தீர்மானித்து விட்டனர்

இந்தத் தகவல்கள், பாரிய பீரங்கிக் கப்பல்களும் அதிவேகத் தாக்குதல் படகுகளுமே தாக்குதலுக்கு இலக்காக்கப்பட வேண்டியவை என்பதை நீண்ட காலத்துக்கு முன்னரே புலிகள் தீர்மானித்து விட்டார்கள் என்பதைத் தெளிவாக புலனாக்குகின்றன.


அதுமட்டுமல்லாமல், இவற்றுக்குப் பதிலாக புதியவற்றைக் கொள்வனவு செய்ய நீண்டகாலம் எடுக்கும் என்பதோடு பெரும் செலவையும் அது ஏற்படுத்துமாகையால், நாட்டின் பொருளாதாரத்தை அழிப்பதன் மூலம் போரில் வெல்லும் விடுதலைப் புலிகளின் தந்திரோபாயத்துடன் அது ஒத்துப் போவதாகவும் இருக்கும்.



புலிகளின் தாக்குதல் படகு ஒன்று

## காப்பாற்ற முடியாதது ஏன்?

இத்தகைய — அதிக விலை மிக்க — யுத்தக் கப்பல்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போனது ஏன்?



கடற்படையின் 'டோறா' ரக அதீ வேக தாக்குதல் படகு

அண்மையில் திருகோணமலையில் அழிக்கப்பட்ட ''-பி457'' டோறா படகை எடுத்துக் கொள்வோம்.

அனேகமாக ஒவ்வொன்றும் 50 கலிபர் துப்பாக்கி ஒன்று பொருத்தப்பட்ட கடற்புலிகளின் ஆகக்குறைந்தது பத்துப் படகுகள் அதனைச் சுற்றி வளைத்துத் தாக்கியிருக்கும் என்பது எமக்குத் தெரியும்.

''டோறா'' அதிவேகத் தாக்குதல் படகு 50 கலிபர் துப்பாக்கிகளை விட சக்தி வாய்ந்த — வீச்சு எல்லை கூடிய — பாரிய துப்பாக்கிகளைக் கொண்டிருந்தாலும் கூட, அதன் அதிதூரத்தாக்குதல் வலு இருட்டுக் காரணமாக பயனற்றதாகவே இருந்திருக்கும்.

## 10 படகுகளைத் தாக்க 4 துப்பாக்கிகள் போதுமானவையா?

அத்துடன் பாதிப்புறச் செய்யும் விடயம் என்னவென்றால் —

பத்து படகுகள் சுற்றி வளைத்துத் தாக்கும் அதே சமயம், டோறா படகில்— இரண்டு 20 எம். எம். துப்பாக்கியும், இரண்டு 50 கலிபர் துப்பாக்கியுமாக — மொத்தம் நான்கு துப்பாக்கிகள் மட்டுமே பொருத்தப்பட்டிருக்கின்றன என்பது தான்.

கடும் இருட்டில் இடம் பெறும் இத்தகைய அதிவேகத் தாக்குதலுக்கு மத்தியில் —''டோறா'' அதிவேகத் தாக்குதல் படகு திரும்பித் தப்பி ஓடுவதற்கு நேரம் கிடைப்பது அபூர்வமே.

''பி-457'' டோறா படகைப் பொறுத்தவரை— அது திருகோணமலைத் துறைமுகத்துக்கு காவலாக நின்று கொண்டிருந்தால் அதற்கு தப்பியோடுவதற்கு இடம் ஏதுமில்லை. அத்துடன் அது தப்பி விலகிச் சென்றிருந்தால் திருகோணமலைத் துறைமுகமே தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும்.

அந்தக் கடும் இருட்டில் டோறாவை நெருங்கித் தாக்குதல் நடத்த வரும் பத்துப் படகுகளில் எது தற்கொலைத் தாக்குதல் படகு என்பதை அடையாளம் கண்டு கூறுவது இயலாத காரியம் என்பதால்— அதிசயம் நிகழ்ந்தாலே ஒழிய— முடிவு அழிவாகவே இருக்க முடியும்.

துரதிர்ஷ்டவசமாக அந்த இரவில் அதிசயம் ஏதும் நிகழாததால் 'பி-457' டோறாவுடன் அதன் 12 கடற் பணியாளர்களும் அழிவுக்கு உள்ளாகினர்.

அந்த பன்னிருவரின் - இரண்டு லெப்டினன்ட்கள் மற்றும் பத்து கடற்படையினரின் - சடலங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை.

கரையோரங்களில் ரோந்துப் பணியில் ஈடுபடவும் படகு அணிகளுக்கு பாதுகாப்பு வழங்கவும் அதிவேகத் தாக்குதல் படகுகள் அவசியமானவை என்பது சர்ச்சைக்கு அப்பாற்பட்டது என்பதால் —

அதிவேகத் தாக்குதல் படகுகளையும் - மட்டுப்படுத்தப்பட்ட காரணங்களுக்காக பீரங்கிக் கப்பல்களையும் - கடற்படை கைவிடுவதற்கு வழி ஏதும் இல்லை.

இந்தக்கப்பல்கள்,
அவற்றின் வேகம் —
தாக்குதல் வீச்சு —
தாக்குதல் வலு —

பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்திலும் கடலில் செல்லக் கூடியபாரிய அளவு—

ஆகியவை காரணமாக இந்த யுத்த காலம் முழுவதும் கடற்படையில் முக்கிய அங்கமாக இடம் பெற்று சிறப்பாக சேவை ஆற்றியிருக்கின்றன.

அப்படியானால் —

அதிவேகத் தாக்குதல் படகுகள் மீதோ பீரங்கிக் கப்பல்கள் மீதோ இடம் பெறக் கூடிய இத்தகைய தாக்குதல்களில் இருந்து அவற்றைப் பாதுகாப்பது எப்படி?

அந்த விவரம் இக்கட்டுரைத் தொடரின் அடுத்த அத்தியாயத்தில்!

(தொடரும்)

# யாழ். விமானப் போக்குவரத்திலுள்ள சிரமங்களை நீக்குவதற்கு நடவடிக்கை

## பிரதி அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே உறுதி

கொழும்பு, நவ. 17

யாழ். விமானப் போக்குவரத்தில் உள்ள பாதுகாப்புக் கெடுபிடிகள் மற்றும் விமானக்கட்டணம் என்பவற்றைத் தளர்த்துவதற்கான நடவடிக்கைகள் பாதுகாப்பு அமைச்சினூடாக மேற்கொள்ளப்பட உள்ளதாகத் திட்ட அமுலாக்கல் இனவிவகார தேசிய ஒருங்கிணைப்புப் பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

திட்ட அமுலாக்கல் இனவிவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் கூட்டத்தில் யாழ். மாவட்ட எம். பி. டாக்டர் ஐ. எம். இல்லியாஸின் கோரிக்கைக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

யாழ். விமானப் போக்குவரத்துக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடுமையாக உள்ளதெனவும் —

விமானக் கட்டணம் அதிகரித்துக் காணப்படுகின்றது எனவும் —

இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாவதாகவும் —

இவற்றைத் தளர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் — [illegible] கோரிக்கை விடுத்தார்.

(இ-ி)

இடம் பெயர்ந்தோருக்கான

# இழப்பீடு கொடுப்பனவு வழங்கவென ரூ. 5 கோடி

## முதல் கட்டமாக அனுப்பப்பட்டது

கொழும்பு, நவ. 17

யாழ்ப்பாணமாவட்டத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்குவதற்கான நிதியின் ஒரு பகுதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்காக முதற் கட்டமாக 5 கோடி ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

மிகுதித் தொகை காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும் என்றும் —

கூடுதலாகப்பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கொடுப்பனவில் முன்னுரிமை அளிக்கப்படும்என்றும்இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

(இ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அஸ்பெஸ்ரோஸ் தண்ணீர்த் தொட்டிகள் 12', அலுமினிய ஏணி, சிங்கர் தையல் இயந்திரம், அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், குபேட்டா மண்ணெண்ணெய் இயந்திரம், நாச்சைகள். 121, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (8977)

1½Kg வுற்கு மேற்பட்ட நிறையுடைய இறைச்சிக் கோழி புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. முகவரிகள்: R.S.K கோழிப் பண்ணை, முருகபதி, உடுவில், சுன்னாகம். (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி), R.S.K கோழிப் பண்ணை, தபாற் கந்தோர் வீதி, மானிப்பாய். (விதானை வளவு, மானிப்பாய்) (43614)

நல்ல நிலையிலுள்ள கேபிள் பிறேக் போட்ட இரண்டு பெண்கள் துவிச்சக்கர வண்டிகள் நீதியான— மலிவான விலையில் விற்பனைக்குண்டு. இல: 404 (64), மணிக்கூட்டு வீதி (புட்டு சந்தி), பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (43681)

இறைச்சிக்கோழி [Broiler] விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். முகவரி:- அல்போன்சஸ், இல: 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (43680)

### தவறிவிட்டது

துரைராசா பரமேஸ்வரி என்பவரின் 337900046 V இலக்க தேசிய அடையாள அட்டை மானிப்பாயில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் து. தவநேசன், இல. 256, சிற்றி ரெக்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43673)

### திருமண சேவை

துர்க்கா திருமண சேவை திங்களிலிருந்து வியாழன் வரை: இல. 187, நாவலர் றோட், பிறவுண் றோட் சந்தியிலும். மறுநாள்களில் புலோலியிலும் (மாயக்காபிள்ளையார் கோயில்) படம், குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். கிறிஸ்தவ மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். (43675)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதான சொந்தத் தொழில் புரியும் இலக்கணத்தில் செவ்வாய் உள்ள, பரணி நட்சத்திரம் மூன்றாம்பாதம் உள்ளவருக்கு மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் கடித மூலம் உடன் தொடர்பு கொள்ளவும். T.K.S.S., புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய். (8978)

### கணிதம், ஆங்கிலம்

O/L Distinction, Credit பெறுபேறுடைய தினமும் இரண்டு மணித்தியாலங்கள் (Paper Class உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் மேற்கு வீதி) திருநெல்வேலி. (43671)

### சலவைப்பவுடர்

மில்கவைற் நுரைவளம் கூடியது உடைகளின் அழுக்கை நொடிப்பொழுதில் அகற்றுகிறது வெண்மையாகவும், பிரகாசமாகவும் சலவை செய்கிறது 10 மேலுறைகளிற்கு கரிசலாங்கண்ணி மூலிகை மற்றும் மரக்கன்றுகளும் வழங்கப்படும். (சி-3508)

---

## சுதேச வைத்தியசாலை

சுன்னாகம்

வைத்திய கலாநிதி பேதுரு அருளப்பன் (DAM, DIMS (Cey))

DR திரேஸ் ஜோசவ் (DAM)

இவர்களால் வைத்திய சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

இடம்: இருபாலை மாதாகோயிலடி
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (43572)

---

நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அஷ்டலக்ஷ்மி
## தினத்தாள் கலண்டர்

விற்பனைக்கு இதோ தயார்!

**விலை ரூபா 120**

ஏராளமான விடயங்களுடன் வெளிவந்த அருமையான கலண்டர்

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், கைதடி.

காட்சிக்கூடம்:
320, செட்டியார் தெரு,
கொழும்பு 11. (43674)

---

## SPOKEN ENGLISH With GRAMMAR

**By: BRITTO**

சிங்களம் — , பேச, வாசிக்க, எழுத
துரித பயிற்சி

**By: K.R. சூரி**

சங்கீதம் — வாய்ப்பாட்டு, வயலின், நடனம்


வட இ.ச. சபை பரீட்சைகள்,
க.பொ.த. - சா.த. / உ.த.
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

## கீதாஞ்சலி கல்வி நிலையம்

றோ.க. தேவாலயம் முன், ஆடியபாத றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(43638)

---

## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் ஆறுமுகம் கந்தையா
(பிரபல வர்த்தகர்)

மலர்வு: **16 - 06 - 1914**
உதிர்வு: **18 - 10 - 1996**

அளவற்ற அன்பு வைத்து, பலர் போற்றும் பண்பைப் பெற்று, குறைவற்ற பாசம் வைத்துச் செழிப்புடன் வாழவைத்த அன்புத் தெய்வமே! இன்று நிழலற்றுக் கண்ணீருடன் வாழ்கின்றோம் ஐயா!

தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கைதடி தெற்கு,
கைதடி. (43678)

---

## அடையாள அட்டை கவரிடுதல்

ரூபா **20/-** முதல் **50/-** வரை

[பாடசாலை — காரியாலயங்களுக்கு விசேட கழிவு உண்டு]

## சன்லைட் றைக்கிளீனேர்ஸ்

யாழ்ப்பாணம்.

(43648)

---

## அனித்தா பயிற்சி நிலையம்

★ CAKE ICING ★ FLOWER MAKING
★ தையல் வகுப்புகள்
நடைபெறுகின்றன.

பவளம் சிவசுப்பிரமணியம்
பூநாறி மரத்தடி, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(43679)

---

## கலையகம் உயர் கல்வி நிறுவனம்

சிவன் வீதி, ஆவரங்கால்.

**A/L** கலை, வர்த்தகம் — புதிய பிரிவுகள்
**DAY CLASS** - மீட்டல் வகுப்புகளும்

ஆரம்பம்: **24-11-96** காலை 8.30 மணி

| | |
|---|---|
| பொருளியல்: | R. அன்ரனி |
| கணக்கியல்: | K. பார்த்திபன் |
| வர்த்தகம்: | V. உதயமோகன் |
| புள்ளி விவரவியல்: | S. திரிகரன் |
| புவியியல்: | R. கந்தசாமி |
| அளவையியல்: | K. நவநீதன் |
| நாடகமும் அரங்கியலும்: | V. வளர்மதி |
| தமிழ், இந்து சமயம், இந்து நாகரிகம் | ''கோப்பாய் - சிவம்'' |

★ மாணவர்கள் தனிப்பாடல்களுக்கும் சுதந்திரமாக அனுமதி பெறலாம்.

(43672)

---

## சர்வதேச லயன்ஸ் கழகங்கள்

மாவட்டம் 306 B — இலங்கை —
பிராந்தியம் VII

## கண்பார்வைக்கு முதலிடமளிக்கும் பிராந்திய செயல் திட்டம்

**Regional Project — Sight First**

இப்பிராந்தியத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலையிலும் எங்கள் மாவட்ட ஆளுநர் லயன் சிக்ரால் அமரதுங்கவினதும் மற்றும் இம் மாவட்டத்திலுள்ள சில லயன்ஸ் கழகங்களின் உதவியுடனும் கண் பார்வைக்கு முதலிடம் கொடுக்கும் (Sight First) இப் பிராந்திய செயல் திட்டத்திற்கு அமைய யாழ். போதனா வைத்தியசாலையில் (கண் வைத்திய நிபுணர், டாக்டர் எஸ். குகதாசனின் அனுசரணையுடன் கண்பூப்படலம் அகற்றும் சத்திர சிகிச்சை செய்து கொள்ள இருக்கும் வசதி குறைந்த மக்களுக்கு வேண்டிய ஒரு தொகை கண்களுக்குரிய கண்ணாடிச் சில்லுகள் (Intraocular Lenses) வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

லயன் எஸ். எஸ். தங்கராஜா
பிராந்திய தலைவர்
பிராந்தியம் VII

''மருத மகால்''
மானிப்பாய் — 17-11-96

வடபிராந்தியம் VII லயன்ஸ் கழகங்கள்

வலயம் I வடமராட்சி, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, சுன்னாகம், வவுனியா.

வலயம் II சாவகச்சேரி, கோப்பாய், மானிப்பாய் பரிஷ், நல்லூர், மன்னார்.

விளம்பர அன்பளிப்பு:

### எஸ். எம். பெர்னான்டோ

(தேர்ச்சி பெற்ற மூக்குக் கண்ணாடி நிபுணர்)
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம். (சி/3505)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

## தேவை: இந்திகாக்கள்!

★ அதிகாரப் பரவலாக்கத்துக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இணைக்கப்பட்டு, ஒரே அலகாக இருக்க வேண்டும். அதுவே சிறந்த தீர்வாக அமையும்.

★ அதிகாரப் பரவலாக்கலுக்கான அலகுபற்றித் தீர்மானிப்பதற்கு வரலாற்று ரீதியான பார்வை தேவை.

★ சுதந்திரத்துக்குப் பின்னர் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் குடியேற்ற திட்டங்களின் மூலம் சிங்கள விரிவாக்கல் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன.

★ அதனால் அந்த மாகாணங்களில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தின், இனவிகிதாசாரம் தமிழ் பேசும் மக்களுக்குப் பாதகமான முறையில் மாற்றமடைந்தது.

★ அத்தோடு தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த பகுதிகளின் தொடர்ச்சித் தன்மையை இல்லாமற் செய்யும் நடவடிக்கைகளும் காலத்துக்குக் காலம்மேற்கொள்ளப்பட்டன

மேலே கூறப்பட்டுள்ள கருத்துக்களும், அவதானிப்புளும் தமிழர் தரப்பிலிருந்து அடிக்கடி பல தடவைகள் எடுத்துக் சொல்லப்பட்டவை.

ஆனால் இம்முறை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர், சிங்கள அரசியல் தலைவர் ஒருவர், இக்கருத்துக்களை முன்வைத்துள்ளார். கொழும்பு அரசாங்கத்தின் உறுப்பினரான அமைச்சர் ஒருவர் உண்மைகளை ஒப்புக்கொண்டு — வெளிப்படுத்தி— வடக்கு - கிழக்கு இணைப்பின் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார் என்பதனை இலகுவில் நம்ப முடியவில்லை. ஆனால் குறிப்பிட்ட அமைச்சரான திரு இந்திகா குணவர்த்தனா, ஓர் இடதுசாரி அரசியல்வாதி என்பதால் அவர் யாதார்த்தைப் புரிந்து கொண்டு உண்மையை வெளிப்படுத்தியிருக்கிறார் எனக் கொள்ளலாம்.

அமைச்சர் இந்திகா குணவர்த்தனா வெளிப்படுத்திய கருத்துக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய பிரதான கட்சிகளின் அமைச்சர்களை, தலைவர்களை ஈர்க்குமானால், அவர்களின் மனங்களில் பதியுமானால் இனப்பிரச்சினையத் தீர்க்கும் முயற்சியில் — பயணத்தில் — அரைவாசி நிறைவாகிவிடும்.

அடுத்த பக்கத்தில், அமைச்சரின் கருத்துக்கள் அவரின் சொந்தச் சகோதரர் தினேஷ் குணவர்த்தனா உட்பட்ட பௌத்த - சிங்கள பேரினவாதப் போக்குடைய தலைவர்களின் மனதைக் குடைந்து மாற்றத்தைக் கொண்டு வருமா என்பது கணக்கில் எடுக்கப்படவேண்டிய கேள்வியாகும்,

தமிழர்கள் தமக்கென ஓர் இராச்சியத்தைக் கொண்டு தம்மைத் தாமே ஆண்ட மக்கள். அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கோ அன்றி அடிமைப் படுத்துவதற்கோ எடுக்கப்படும் நடவடிக்கைகள் அல்லது சதிகள் அநீதியானவை, அடாத்தானவை என்பதனைச் சிங்கள அரசியல் தலைவர்கள் எல்லோரும் உணர வேண்டும்,

தமிழ் மக்களும் சுதந்திரமுள்ள மக்களாக, தன்மானமுள்ள மக்களாக வாழக்கூடிய நீதியான தீர்வு ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்பதில் சிங்களத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து உழைக்க முன்வர வேண்டும்.

ஓர் இந்திகா, ஓராயிரம் இந்திகாக்களாக பெருகினால் நீதியான தீர்வு அசாத்தியமானதல்ல அதுவரை தமிழர்கள் காத்திருக்க முடியுமா?

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சந்திரிகா நல்ல தீர்வை முன்வைப்பார்

### ஈ. பி. டி. பியின் எம். பி. நம்பிக்கை

காரைநகர், நவ 17

தமிழ் மக்களின் துயரங்களுக்கு நல்ல தீர்வை — முடிவை — எடுக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சார்ந்தது. அவர் அத்தகைய முடிவை எடுப்பார் என நம்புகிறோம்.

— இவ்வாறு தெரிவித்தார் ஈ பி. டி. பி யின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், எம். பியுமான இரா ராமேஸ்வரன்.

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் காரைநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய தீபாவளி தின விழாவையொட்டி வெளியிட்ட செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவரின் செயலாளர் வ. சிவா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் காரைநகர் கடற்படைத்தள அதிகாரிகள், புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் கே. சுந்தரலிங்கம், கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய அதிபர் பா. தவநாயகி, காரைநகர் வடக்கு அ மி த க. பாடசாலை அதிபர் திருமதி த. நாகரத்தினம், காரைநகர் ப. நோ. கூ. ச தலைவர் சிற்றம்பலம், பொதுமுகாமையாளர் க. தியாகராசா, கிராமசேவையாளர் சிவலிங்கம் உட்பட பல பிரமுகர்களும் பெருந் தொகையான மக்களும் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

அங்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ. பி. டி. பியின் காரைநகர் பொறுப்பாளர் ந. லோகன் தனது உரையில்:

''கொடிய யுத்தம் இந்நாட்டில் நடக்கும் இவ்வேளையிலும் எமது மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை தொடர்ந்து பேணுவதற்கு இத்தகைய நிகழ்வுகள் அவசியமானவை

''தீபாவளித் திருநாளில், பகைமை உணர்வுகளைக் களைந்து நல்லுணர்வுகளை மனதில் நிறைத்து நம் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் பாதையில் நம்மை வழி நடத்த இத்தகைய நிகழ்வுகள் உதவுவதாக இருக்கும்.

''தீவக மக்களின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் எமது கட்சி இயன்ற அனைத்தையும் செய்யும்'' — என்றார்,

## இந்திரஜித்குப்தா இங்கு வருவார்

கொழும்பு, நவ. 17

இந்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா இந்த மாத இறுதியில் இலங்கை வரவிருக்கிறார்.

நான்கு நாள் விஜயம் மேற்கொள்ளவிருக்கும் அவர் இரு தரப்பு பிரச்சினைகள் பற்றி பல்வேறு பேச்சுக்களில் ஈடுபடுவார்.

இலங்கையில் உள்ள சார்க் செயலகத்துக்கும் அவர் செல்வார். (இ-3)

## கலைப்பீட விரிவுரைகள்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தின் எல்லா வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளதாக கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகள் சம்பந்தமான பொதுக் கூட்டம் கைலாசபதி கலை அரங்கில் இடம் பெறும் என்றும் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## கடற்படைத் தளபதியின் பதவிக்காலம் முடிவுற்றது

கொழும்பு, நவ. 17

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோஹான் சமரசேகராவின் சேவைக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது.

முன்னாள் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளன்ஸி பெர்னாண்டோ 1992 நவம்பர் 16 ஆம் திகதி கொழும்பு காலிமுகத்திடல் அருகே தற்கொலைப் படைப் போராளி ஒருவரின் தாக்குதலின்போது கொல்லப்பட்டதால் உருவான கடற்படைத் தளபதி பதவி வெற்றிடத்துக்கு மோஹான் சமரசேகரா நியமிக்கப்பட்டிருந்தார்.

கடற்படைத் தளபதியின் பதவிக்காலம் 4 ஆண்டுகளாகும். இதன்படி கடற்படைத் தளபதியின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது என ''லங்காதீப'' நாளிதழ் தெரிவிக்கிறது. (இ–10)

## அனுராதபுரம் நகரில் படையினர் வீதித் தடை!

### புலிகளின் தாக்குதல் அபாயம்

கொழும்பு, நவ. 17

அனுராதபுரம் நகரில் சில வீதிகளில் குறிப்பிட்ட நேரங்களில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

புலிகள் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் காரணமாக இந்த நடவடிக்கையை பொலீஸார் எடுத்துளனர்.

ஜயந்தி மாவத்த சுற்று வளைவு, வலிசிங்க ஹரிச்சந்திர மாவத்த, டி எஸ் சேனநாயக்கா மாவத்தை, ஐயந்தி மாவத்த ஆகியன காலை 6.30 முதல் 8 30 மணி வரை, பிற்பகல் 1.30 மணி முதல் 2.30 மணி வரை வார நாள்களில் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும்.

எனினும் தடை செய்யப்பட்ட நேரங்களில் மாணவரை ஏற்றிச் செல்லும் வாகனங்களும் விசேட அனுமதி பெற்ற வாகனங்களும் இவ் வீதிகளைப் பயன்படுத்த முடியும். (இ-150)

## கிழக்கில் தேடி அழிக்கும் நடவடிக்கை

கொழும்பு, நவ 17

கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்ட தேடி அழிக்கும் நடவடிக்கையை இராணுவம் ஆரம்பித்திருப்பதாக தளபதி ரொஹான் தலுவத்த தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் மிக அதிகமான சேதத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்றார் அவர்

நடவடிக்கை வெற்றியளித்துள்ளது. ஆனால் விவரங்களை வெளியிட முடியாது என்றும் அவர் அறிவித்தார். (இ-150)

## சிறிய விளக்காக வாழ்வதற்கு முயல்வோம்

காலத்தின் கோலம் தெரிந்து செயலாற்ற நாம் அழைக்கப்படுகின்றோம். இதற்கு ஞானம் பெரிதும் உதவியாக இருக்கின்றது. இந்த இறை ஞானம் தேடிப் பலர் அலைகின்றார்கள். இறை ஞானம் எமக்கு வாழ்க்கையை அறிந்து கொள்ள பெரிதும் உதவுகின்றது.

''நீங்கள் நம்மைத் தேடுவீர்கள். முழு இதயத்தோடு நம்மைக் கண்டடைவீர்கள். ஆம் மெய்யாகவே நம்மைக் கண்டடைவீர்கள்'' (ஏரே 29 : 13) இந்த தேடுதல் வேறு எங்குமன்று எமது மத்தியில்தான். எமது சமுதாயத்தின் மத்தியில்தான் கண்டடையவேண்டும். இன்றைய இந்நிலையில், கஷ்டப்பட்டவர்கள், துன்பப்பட்டவர்கள், நலிவுற்றோர், தாழ்வுற்றோர் இவர்களுக்கு உண்மையாக உதவி செய்ய நாம் தேடிச் செல்லவேண்டும். இயேசு மக்களைத் தேடிச் சென்றார், இல்லாதோர், வேதனைப்படுவோர், நோயினால் அவதிப்பட்டோர் இன்னும் பலரை அவர் தேடிச் சென்றார்.

அன்பார்ந்தவர்களே, இன்று எமக்கு ஆண்டவருடைய நற்செய்தி வாயிலாக சொல்லப்படுவது... ''விழிப்பாயிருங்கள்...... ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்.'' என்பதாகும் இதனை நினைவுபடுத்துவதற்காக பத்துக் கன்னியர்கள்' உவமை சொல்லப்படுகின்றது இதில் ஐவர் விவேகிகள்; ஐவர் அறிவிலிகள் விவேகிகள் தகுந்த ஆயத்தத்துடன் சென்றார்கள் அறிவிலிகள் ஆயத்தமின்றி சென்றார்கள். இறைவனைச் சந்திக்க ஆயத்தம் செய்வது தனி ஆளுக்குரியது. மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாதது.

எனவே ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் தன் இறுதி நாளை எதிர்நோக்கி வாழ வேண்டும். அதற்கு தயார் செய்து கொள்ளும் இடமாக இவ்வுலகம் அமைந்திருக்கின்றது. எமது சொல், சிந்தனை என்றும் தெளிவானதாகவும், மற்றவர்களில் அக்கறை உள்ளதாகவும் அமையவேண்டும். இந்தக்காலத்தின் கோலம் அறிந்து செயற்படும் விவேகிகளாக இருக்கவேண்டும்.

இக் காலம் இறைவனால் கொடுக்கப்பட்ட காலம்; மற்றவர்கள் எம்மிலும் உயர்ந்தவர்கள் என்ற மனித மாண்பினை வளர்த்துக் கொள்ளும் காலம். நாம் ஒவ்வொருவரும் சிறிய விளக்காக வாழ முயல வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் எமக்கு நிறைந்த சந்தர்ப்பங்கள் எமக்கு முன் விதைக்கப்பட்டுள்ளன; அவற்றைக் கண்டு பிடிக்கும் ஞானம், தெளிவு உள்ளவர்களாக வாழ்ந்து. ஆண்டவருடன் மண வீட்டில் நுழைந்து கொள்ளத் தகுதி அடைவோமாக.

— அருட்திரு.
சாள்ஸ் கொலின்

**ஞாயிறு நற்பிரசாதம்**

**நாளை**

கார்த்திகை 3
திங்கட்கிழமை
திதி: அட்டமி
முன் இரவு 7.32 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
பிற்பகல் 4 34 வரை.
கரிநாள்
ராகுகாலம்: 7.39-9.09
சுபநேரம்: 12.09 – 1.39
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தப்பிய படையினர் மீண்டும் வந்துசேர மேலும் அவகாசம்

கொழும்பு, நவ. 17

இராணுவத்தை விட்டு ஓடியவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கி மீண்டும் இராணுவத்தில் அவர்கள் இணைய இம்மாதம் 30ஆம் திகதி வரை கால அவகாசம் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தை விட்டோடிய பலர் பல்வேறு காரணங்களைக் காட்டி பொது மன்னிப்புக் கால எல்லையை நீடிக்குமாறு இராணுவத் தளபதிக்கு விடுத்தகோரிக்கையை அடுத்து அவர்கள் மீண்டும் சேவையில் இணைய வசதியாக பொது மன்னிப்புக் கால எல்லை இம் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்ததாக 'லங்கா தீப' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ–10)

## ஒட்டிப் பிறந்த இரட்டையர் அமெரிக்காவுக்கு புறப்பாடு

கொழும்பு, நவ. 17

திவுலப்பிட்டி, வதுப்பிட்டிவெல ஆஸ்பத்திரியில் மார்புப் பகுதியில் ஒட்டிய நிலையில் பிறந்த இரட்டைக் குழந்தைகள் கலிபோர்ணியாவில் உள்ள 'லோமா' மருத்துவ மனையில் வைத்து சத்திர சிகிச்சை மூலம் பிரித்தெடுக்கப்பட உள்ளனர்.

இந்த இரட்டைக் குழந்தைகள் இன்று விமான மூலம் கலிபோர்ணியாவுக்கு எடுத்துச் செல்லப்பட இருப்பதாக கொழும்பு லேடி றிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த குழந்தைகளைப் பிரிப்பதற்குத் தேவையான முழுச் செலவையும் வழங்க அமெரிக்காவில் உள்ள கோடீஸ்வரர்களில் ஒருவரான பொப் கொலிஷியன் முன்வந்துள்ளார்.

இக் குழந்தைகளின் தாயாரும், லேடி றிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை நிபுணர் வை. குலசேகராவும் இக் குழந்தைகளுடன் கலிபோர்ணியா செல்கின்றனர். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 வயதுக்கு மேற்பட்டோருக்கு கட்டாய இராணுவப் பயிற்சி

## அரசு தீவிரமாக ஆலோசிப்பதாகத் தகவல்

கொழும்பு, நவ. 17

14 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களைக் கட்டாய இராணுவ சேவைக்கு அழைக்கும் சட்டம் ஒன்றை கொண்டு வருவது பற்றி அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது.

இதனிடையில் இராணுவம் புதிய ஒழுங்கு விதிகளைத் தயாரித்து வருகிறது இந்த ஒழுங்கு விதிகள் ''ஆட்சேர்ப்பு மற்றும் துணைப் படைகள் — 1985' சட்டத்தின் கீழ் அமுல் செய்யப்படவிருப்பதாக உயர் அரச வட்டாரம் ஒன்று மிட்வீக் மிரர் பத்திரிகைக்குத் தெரிவித்தது.

இச்சட்டத்தின்படி ஒரு மாணவனுக்குரிய வயது 16 இல் இருந்து 14 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் 14 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களை இராணுவ சேவைக்கு சேர்த்துக்கொள்ள முடியும்.

இராணுவத்திலுள்ள ஆட்பற்றாக் குறையை நிரப்புவதற்கு அண்மையில் நடத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் போதிய பலனைத் தராத காரணத்தினால்தான் கட்டாய இராணுவ சேவைத் திட்டத்தைக் கொண்டு வரும் நடவடிக்கையில் அரசு முனைந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டு அத்தீர்வை அமுல் நடத்த அரசுக்கு உதவுவதற்கென மேலும் 75,000 படையினர் இராணுவத்துக்குத் தேவைப்படுவதாக இராணுவட்டாரங்கள் மிட்வீக் மிரர் பத்திரிகைக்கு தெரிவித்தன.

கடந்த ஞாயிறு ரூபவாஹினியில் இராணுவப்பெண் பிரிவுத் தளபதி மேஜர் நந்தசீலி உரையாற்றுகையில் — இராணுவசேவைக்கு தங்கள் மகன்களை அனுப்பும்படி தாய்மார்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். (இ-150)

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்



மலர்வு: 21 — 10 — 1932

உதிர்வு: 28 — 11 — 1995

அமரர்

**கணபதிப்பிள்ளை இராசநாயகம்**

முல்லாத்தனை, தெல்லிப்பழை.

(முன்னை நாள் யாழ். ஜவர்ஜி பிறதர்ஸ் முகாமையாளரும், தெல்லிப்பழை றங்கநாதன் ஸ்ரோர்ஸ் கணக்காளரும்)

திதி:- 17-11-1996

அன்னையாய், தந்தையாய், ஆசானாய் எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே! அன்பின் இருப்பிடமே பாசத்தின் பிறப்பிடமே! அருமை அப்பாவே உங்களுக்கு வந்ததே கொடிய நோய் நீங்காத நினைவாகி நெஞ்சில் இடங்கொண்டு நெடுந்துயில் கொண்டதேனோ? எங்கள் குடும்ப விளக்கே, ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டானாலும் எங்கள் இதயம் ஆறாது.

எங்களை பாசமெனும் உரத்தில் வளர்த்து நன்மை, தீமை காணாது எம்மை விட்டுப் பிரிந்த பாசமுள்ள அப்பாவே என்றும் எம்முடன் நீங்காது நிறைந்துள்ளதாகவே நினைத்து வாழ்கின்றோம். உயிர் உள்ளவரை உங்கள் நினைவு எம்முள் பசுமையாய் என்றுமிருக்கும் தங்கள் ஆன்மா நித்திய சமாதானத்தில் இளைப்பாற எல்லாம்வல்ல அந்த இறைவனை வேண்டுகிறோம்:

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், அத்தான்,
உற்றார், உறவினர்கள்.

இ. ஸ்கந்தகுமார் (மகன்),
32, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (சி/ 3511)

## மரண அறிவித்தல்

### கந்தையா தங்கம்மா

கொட்டடி-நீராவியடியை வதிவிடமாகக் கொண்ட திருமதி கந்தையா தங்கம்மா காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சோ. சண்முகரத்தினம், சோ. அமிர்தலிங்கம், திருமதி மகேஸ்வரி துரைராசா, சோ. ஜீவரட்ணம் ஆகியோரின் அருமைச் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17-11-96) ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு பிரப்பங்குள லேனில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சோ. சண்முகரத்தினம்
(மகன்)

145/4 பிரப்பங்குள லேன்,
வண்ணார்பண்ணை. (43685)

## மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### புலிகளுக்கு..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 23 ஆம் திகதிக்கும் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சென்றுள்ளனர்.

தமது அமைப்பைச் சேர்ந்தோர் வேகப்படகு ஒன்றில் கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சென்றனர் என ஈ. என். டி. எல். எவ். அமைப்பின் சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பயணத்துக்கு இந்திய அதிகாரிகளின் ஒத்துழைப்பு இருந்தது என்றும் கூறப்படுகின்றது.

ஈ. என். டி. எல். எவ்வின் இரு பிரதி நிதிகளும் இரகசிய இடமொன்றில் விடுதலைப் புலிகளின் பிரமுகரான சு. ப. தமிழ்ச் செல்வனைச் சந்தித்து விரிவாகப் பேச்சு நடத்தியதாக புதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

தமக்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுத்தருவதற்கு நடுவராகச் செயற்படுமாறு இச்சந்திப்பின்போது புலிகள் அமைப்பு ஈ. என். டி. எல். எவ்விடம் கேட்டதாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இந்தியாவிடமிருந்து உதவிகளைப் பெறுவது தொடர்பாக புலிகள் அமைப்பு நேரடியாகவே இந்தியாவிடம் கோரிக்கை விடுக்க வேண்டும் என ஈ. என். டி. எல். எவ். அமைப்பு தெரிவித்ததாம்.

இந்தச் சந்திப்புக் குறித்து சென்னையில் உள்ள ஈ. என். டி. எல். எவ். பணிமனையுடன் தொடர்பு கொண்டபோது —

கிளிநொச்சியில் இடம் பெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகளை அப் பணிமனை உறுதிப் படுத்தியது. ஆனால் பேச்சுக்களின் விபரங்களை அது வெளியிடவில்லை.

அதேசமயம் —

தமக்கு ஆதரவான போக்குடைய தமிழ்க் குழு ஒன்றின் மூலமாக இந்தியாவின் உதவியைப் புலிகள் கோரியுள்ளதாக தமிழ் நாடுப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன.

கிளிநொச்சி சென்ற ஈ. என். டி. எல். எவ். பிரதிநிதிகள் அங்கு விடுதலைப் புலிகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் —

அங்கு தமிழ் அகதிகளுக்கு உதவும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளனர் என புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

—இவ்வாறு அந்தச் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது.

கடந்த மாத இறுதியில் -- இதே காலகட்டத்தில் — இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால், அதனைக் காலம் குறிப்பிடாது ஒத்திவைத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-10)

## சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 17

காங்கேசன் சிமெந்து ஊழியர்களின் செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மாதக் கொடுப்பனவுகள் நாளை திங்கள் காலை 9.00 மணிக்கு யாழ். வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கோழிக்குஞ்சு நோய்த் தடுப்பு மருந்து

சங்கானை பிரதேச செயலகத்தால் கடந்த 29 ஆம் திகதி வழங்கப்பட்ட கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக் கொண்ட சகல பயனாளிகளும் தங்கள் கோழிக்குஞ்சுகளுக்குரிய 21 ஆம் நாளுக்கான நோய் தடுப்பு மருந்தினை வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாமெனப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (இ)

## மின்சாரக் கோபுரங்கள் குண்டு வைத்துத் தகர்ப்பு

வாழைச்சேனைக்கும் வெலிகந்தைக்கும் இடையே புனானை என்ற இடத்தில் அமைந்துள்ள அதிசக்தி வாய்ந்த மின்சாரக் கோபுரங்கள் நேற்று முன்தினம் இரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

இதனால் சுமார் 20 லட்சம் ரூபா நட்டமேற்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ரி)

## மர்மக்கப்பலைகண்டுபிடிக்க கிழக்கில் ஹெலி தேடுதல்

மட்டக்களப்பு துறைநீலாவணைக் கடல் பகுதியில் மர்மக் கப்பல் ஒன்று நடமாடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து விமானப் படையினரின் உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டது.

கடந்த வியாழன் இரவு இக் கப்பல் கிழக்குப் பகுதி கடலில் காணப்பட்டதாக பாதுகாப்புப் படைகளுக்கு தகவல் கிடைத்ததையடுத்து நேற்று முன்தினம் இப்பகுதியில் ஹெலிக்கொப்ரர் மூலம் தேடுதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் கப்பல் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

## மஹரகம ஆஸ்பத்திரியில் தமிழ் நோயாளர்கள் அவதி

கொழும்பு, நவ. 17

மஹரகம புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு செல்லும் தமிழ் நோயாளர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியாகச் செல்லும் தமிழ் இளைஞர்கள்—யுவதிகள் அங்கு கடமை புரியும் பாதுகாப்பு ஊழியர்களின் பலத்த கெடுபிடிகளுக்கு ஆளாகின்றனர்:

தமிழ் இளைஞர்—யுவதிகளை பாதுகாப்பு ஊழியர்கள் புலிகள் என்று கூறி அடித்து துன்புறுத்துகின்றனர் என்று முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை நடந்த சம்பவம் ஒன்றில், 6 வயதான தமிழ் சிறுமிக்கு அவசரமாக இரத்தம் தேவைப்படவே அதனை வழங்கச் சென்ற அவரது சிறிய தகப்பன் முறையான 28 வயது இளைஞர் ஒருவர் பாதுகாப்பு ஊழியர்களால் நையப்புடைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இவ்வாறான சம்பவங்கள் வோர்ட்டுக்களிலும் இடம் பெறுவதாகவும் —

சில தாதிமார் மற்றும் சிற்றூழியர்கள் தமிழ் பேசும் மக்களுடன் மிகவும் கடுமையாகவும் எடுத்தெறிந்தும் நடந்து கொள்வதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன.

தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரே காரணத்துக்காக புற்றுநோயாளர்கள் மஹரகம சிகிச்சை நிலையத்தில் மிகவும் மோசமாக நடத்தப்பட்டு வருவது குறித்து சம்பந்தப்பட்ட வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் சுகாதார அமைச்சர் ஏ. ஏச். எம். பௌஸி ஆகியோர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் —

தமிழ் பேசும் நோயாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனவும்— கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-4)

### சாவகச்சேரி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த சிறுவன் ஒருவருமே காயமடைந்த பொதுமக்கள் ஆவர்.

மீசாலை மடத்தடியைச் சேர்ந்த வி. கார்த்திகேசு (வயது 78), தர்மபாலன் கௌரிசங்கர் (வயது 10) ஆகிய இந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர். (இ-117)

### துப்பாக்கி-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களைப் பார்த்துவிட்டு கடல் வழியாகத் திரும்பிய சமயம் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

மரணமடைந்த தர்மராசாவின் சகோதரர் நகுலராஜ் (வயது 27) என்பவர் கடந்த மாதம் 4 ஆம் திகதி இரவு இதேபோல் கேரதீவு சட்டக் கரையோரப் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகிப் படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நேற்று இடம்பெற்ற மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. (இ-15-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org